செ.வெ.எண்:13 நாள்:07.12.2018

## அரியலூர் மாவட்டத்தில் படைவீரர் கொடிநாள் தேநீர் விருந்து நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் முன்னாள் படைவீரர் நல அலுவலகம் சார்பில் படைவீரர் கொடிநாள் தேநீர் விருந்து நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (07.12.2018) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் **திரு.சே.தனசேகரன்** அவர்கள் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்ற ஒரு மாணவனுக்கு ரூ.5,000/-க்கான காசோலையினையும், 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் இரண்டாமிடம் பெற்ற ஒரு மாணவிக்கு ரூ.3,000/-க்கான காசோலையினையும், 1 நபருக்கு ரூ.20,000/- மதிப்பில் திருமண உதவித்தொகைக்கான காசோலையினையும், மனநலம் குன்றிய முன்னாள் படைவீரர்களின் சீரார்களுக்கான நிதியுதவி 1 நபருக்கு ரூ.9,000/-க்கான காசோலையினையும், 2 நபர்களுக்கு ரூ.20,000/- மதிப்பில் ஈமச்சடங்களுக்கான நிதியுதவினையும் என **06 நபர்களுக்கு ரூ.57 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தாவது :-**

முன்னாள் படைவீரர் நல அலுவலகம் சார்பில் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலநிதியிலிருந்து 45 மானியதாரர்களுக்கு ரூ.10 இலட்சத்து 67 ஆயிரம் மதிப்பிலான நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

தொகுப்பு நிதியிலிருந்து 17 முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் வருடாந்திர பராமரிப்பு மானியமாக ரூ.1 இலட்சத்து 51 ஆயிரத்து 475 மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

பாரத பிரதமரின் கல்வி நிதியுதவியின் கீழ் 11 முன்னாள் படைவீரர்களின் சிறார்கள் மற்றும் சிறுமிகளுக்கு நடப்பாண்டில் ரூ.2 இலட்சத்து 64 ஆயிரம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு கல்வியாண்டிலிருந்து முன்னாள் படைவீரர்களின் இளைஞர்களுக்கு வங்கி பயிற்சித் தேர்வில் (IBPS) தேர்ச்சி பெற்றவர்களுக்கு பயிற்சி உதவித் தொகை வழங்கப்படவுள்ளது.

இராணுவத்தில் அதிகாரியாக பணியாற்ற அரியலூர் மாவட்டத்தில் இளஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில் CDS தேர்வில் தேர்ச்சி பெறவும் முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு சென்னை, முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தின் மூலம் இலவசமாக பயிற்சி, உணவு மற்றும் தங்கும் இடவசதி செய்து தரப்படுகிறது.

நமது மாவட்டத்தில் முன்னாள் படைவீரர் நல அலுவலகம் மூலமாக சிறப்பு வேலைவாய்ப்பு பிரிவில் 129 முன்னாள் படைவீரர்கள் பதிவு செய்துள்ளனர். இவர்களில் நடப்பு ஆண்டில் 75 முன்னாள் படைவீரர்கள் வேலைவாய்ப்பிற்காக பரிந்துரைக்கப்பட்டு 09 முன்னாள் படைவீரர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் கா.குணசேகரன், முன்னாள் படைவீரர் நல அலுவலக கண்காணிப்பாளர் ம.கலையரசிகாந்திமதி, உதவியாளர் மு.ஜஸ்டின் திரவியம் மற்றும் முன்னாள் இராணுவத்தினர், மற்றும் முன்னாள் இராணுவ வீரர்களின் குடும்பத்தார்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**